# அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம், லோறன்ஸ்கூக்
## ANNAI POOPATHI TAMILSK KULTURSENTER, LØRENSKOG
## ANNAI POOPATHI TAMIL CULTURAL CENTER, LØRENSKOG

# பெற்றோருக்கான வாராந்தத் தகவல்கள்!

*கிழமை இல. 39-2022*

## கல்வி

01.10.2022 சனிக்கிழமை வழமைபோல் நடைபெறும். சில வகுப்புகள் இடமாற்றம் செய்யப்படவுள்ளது. இடமாற்றம் செய்யப்படவுள்ள வகுப்புகளுக்கு நேரடியாகத் தகவல் வழங்கப்படும்.

அறிவாடல் நாடலாவிய போட்டி எதிர்வரும் 02.10.2022 ஞாயிற்றுக்கிழமை 13:30 - 15:30 தமிழர் வள ஆலோசனை மையத்தில் நடைபெறும். மேலதிக விபரம் இப்போட்டியில் பதிவுசெய்த மாணவர்களுக்கு நேரடியாக வழங்கப்படும்.

## அடுத்தவாரம் 08.10.2022 அன்று இலையுதிர்கால விடுமுறையாக அறிவிக்கின்றோம்.

அனைத்துலக ஆண்டிறுதித் தேர்விற்கான பெறுபேறுகள் எமக்குக்கிடைத்துள்ளது. மாணவர்களின் இணையவழியினூடாக தனித்தனியே அடுத்தவார முடிவிற்குள் அனுப்பிவைக்கப்படும்.

## கலை - 01.10.2022 - சரஸ்வதிபூஜை - ஓசன் பாடசாலை

அன்று ஏடுதொடக்கல் மற்றும் கலைவகுப்புகள் தொடங்குதல். அத்துடன் கலைப்படம் செல்லும் மாணவர்கள் தங்கள் சங்கீத மற்றும் நடன ஆசிரியர்களுக்கு மரியாதை செலுத்தி அவர்களிடம் ஆசிபெறுதல்.

தங்கள் குழந்தைகளுக்கு ஏடுதொடக்கவோ அல்லது சிறுவர் வகுப்பில் இணைக்கவோ அல்லது கலைவகுப்புகளில் புதிதாக இணைக்க விரும்பினால் 30.09.2022 நேரம் 12:00 இற்கு முன்னதாக கலைப்பொறுப்பாளர்களுடன் தொடர்புகொள்ளவும்.

## கடந்தவாரம் சனிக்கிழமை - கலை - வாணிவிழா 2022

Kjenn Samfunnskole மண்டபத்தில் நவராத்திரி விழா சரியாகக் காலை 10:00 மணிக்கு தொடங்கி மிகச்சிறப்பாக நடைபெற்று சரியாக 12:45 மணியளவில் பிரசாதம் வழங்கப்பட்டது. இவ்விழாவினை சிறப்பாக நடாத்த பணியாற்றிய ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் மற்றும் வளாக நலன்விரும்பிகள் அனைவருக்கும் உளம்நிறைந்த நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

குறுகிய நேரத்தில் தகவல் வழங்கியும் எமது அழைப்பை ஏற்று வந்து தங்கள் சான்றிதழ்களைப் பெற்றுச்சென்ற 10ஆம் வகுப்பு (2019-2020) மாணவர்களுக்கு எமது பாராட்டுகளையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## நிதி

இவ்வாரம் கட்டணம் சார்பான நினைவூட்டும் தகவல் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. கட்டணம் செலுத்திய சிலருக்கும் இத்தகவல் கிடைக்கப்பட்டுள்ளது. எனவே கட்டணம் செலுத்தியவர்கள் அத்தகவலை நீக்கிவிடவும். கட்டணம் செலுத்தியதில்/ செலுத்தவேண்டியதில் ஐயப்பாடு இருப்பின் எமது நிதிப்பொறுப்பாளர் திரு. யூட் இமானுவேல்பிள்ளை அவர்களுடன் நேரடியாகத் தொடர்புகொள்ளவும்.

## தங்கள் பிள்ளைகளின்

***கல்வி , வகுப்பறை மற்றும் ஆசிரியர் சார்பான தொடர்புகளுக்கு***

வகுப்பு

*மழலையர் - 5 வரை - திருமிகு. தேவாம்பிகை விமலசேனன் (46693901) அவர்களுடனும்*

*6 - 11 வரை - திருமிகு. சாந்தசொரூபி சாந்தநிகேதன் (40466540) அவர்களுடனும்*

***கலை வகுப்புகள் சார்பான தொடர்புகளுக்கு***

*திருமிகு. துராதரன் கணேசமூர்த்தி (40058232) மற்றும் திருமிகு. காத்தியா மோகன்ராஜ் (40141310) அவர்களுடனும்*

***நிதி அல்லது கட்டணம் சார்பான தொடர்புகளுக்கு***

*திருமிகு. யூட் இமானுவேல்பிள்ளை (46545192) அவர்களுடனும்*

***பதிவுகள் மற்றும் விளையாட்டு சார்பான தொடர்புகளுக்கு***

*திருமிகு. தனுசியா சென் யோன்ஸ் (90849958) அவர்களுடனும்*

*நேரடியாகத் தொடர்பினை மேற்கொள்ளவும்.*

தேவை ஏற்படின் வளாகத் தொலைபேசி (91875537) எண்ணுடனும் தொடர்புகொள்ளலாம்.

***எமது வளாக நிர்வாகச் செயற்பாடுகளில் அல்லது எம்மால் வழங்கப்படும் தகவல்களில் தெளிவின்மை அல்லது சந்தேகங்கள் இருப்பின் வளாகப்பொறுப்பாளருடன் நேரடியாகத் தொடர்புகொள்வதன் மூலம் தேவையற்ற ஊகங்களைத் தவிர்த்துக்கொள்ளலாம்.***

<u>நன்றி!</u>

<u>நிர்வாகம்</u>
அன்னை லோறன்ஸ்கூக் வளாகம்

தமிழை வளர்க்கப்
பணிபுரிவோம்!